## வல்வை சம்பவம்: பாரபட்சமற்ற பகிரங்க விசாரணை:


Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற்பெட்டி எண் : 49

இதழ் 61

மலர் 9

போன் 889

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ பங்குனி 29 முஹறம் 1 புதன்கிழமை [12-4-67]


## சனசமூக நிலையம் பிரதமருக்குத் தந்தி

வல்வெட்டித்துறை, செவ். கடந்த சனிக்கிழமையன்று வல்வெட்டித்துறையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தில் ஆர். சிவஞானசுந்தரம் என்ற வாலிபர் கொலையுண்டது சம்பந்தமாக இலங்கை வானொலியில் ஒலிபரப்பான பொலிஸ் அறிக்கை ஒன்றை மறுத்து ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவர் திரு. இரத்தினவடிவேலுவும், பருத்தித்துறை எம். பி திரு. க. துரைரத்தினமும் தந்திகள் அனுப்பியுள்ளனர்.

சனிக்கிழமையன்று நடைபெற்ற சம்பவம் குறித்து மக்கள் பீதி கொண்டிருப்பதாகவும் அதுசம்பந்தமாக பாரபட்சமற்ற பகிரங்க விசாரணை ஒன்றை நடத்துப்படியும் கோரி வல்வெட்டித்துறை சனசமூக நிலையப் பிரமுகர்கள் பிரதமமந்திரிக்கு அவசரத்

[6-ம் பக்கம்பார்க்க]

# ‘மாவட்ட சபை மசோதாவை எதிர்த்து வாக்களிப்போம்’

## இணுவில் கூட்டத்தில் ஜி. ஜி. அறிவிப்பு



உடுவில், புதன்

‘மாவட்டசபை தமிழருக்கு நன்மை தரப் போவதில்லை. தமிழருக்கு நன்மை தராத இம்மசோதா பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டால், நானும் எனது கட்சியும் இதனை நிச்சயமாக எதிர்த்தே வாக்களிப்போம்.’

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் வீதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

தமிழ் காங்கிரஸ் உடுவில் மாவட்ட இணுவில் தெற்கு கிளை சார்பில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: இன்று நாளுக்கு நாள் பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம் மாவட்ட சபைகள் மூலம் தீர்ந்து விடும் என சிலர் நினைக்கிறார்கள். மாவட்ட சபை திட்டத்தின்படி வடக்கு கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஒன்றரை மாகாணங்களில் தான் தமிழர் ஆட்சி செய்ய முடியும். ஏனைய ஏழரை மாகாணங்களில் வாழும் தமிழர் நிலை என்ன? அங்கு நடைபெறும் நிர்வாக மொழி ஏது?

வழக்கறிஞர் திரு. க. சோமஸ்கந்தர் தலைமையில் நடைபெற்ற இச் கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

‘‘இப்போது உள்ள கல்லூரிகளையும், பாடசாலைகளையும் புனரமைப்பு செய்வதன் மூலம் கல்வியில் ஒரு மாற்றத்தை இந்த நாட்டில் ஏற்படுத்த கல்வி அமைச்சர் திட்டமிட்டுள்ளார் என அறிகிறேன். சனத்தொகை அடிப்படையில் பாடசாலைகளின் எண்க்கையை கூட்டவோ, குறைகவோ, அல்லது பாடசாலைகளின் தரத்தினை உயர்த்தவோ தாழ்த்தவோ முடியும். யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் அளவுக்கு மிஞ்சிய பாடசாலைகள் இருப்பதை காணலாம். கல்வி அமைச்சர் தனது திட்டப்படி பாடசாலைகளின் புனரமை

(6-ம் பக்கம் பார்க்க]


## மக்களின் தோழன்!

# சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்

ஈழவள நாட்டின் வியாபாரிகள் எல்லோருமே வாங்கி விற்பது இது ஒன்றே தான்!


## பாரத தலைமை நீதிபதி

புதுடில்லி, ஏப். 11

நீதிபதி ஸ்ரீவாஞ்சு பாரதத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

ஸ்ரீசுப்பாராவ் ராஜினமா [illegible] நியமிக்கப்பட்டுள்ளார்.

## ‘இந்துக்கள் தமக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளவேண்டும்’

### ஆலயப் பிரவேசம் பற்றி ஸ்ரீஸ்கந்தராஜா

யாழ்ப்பாணம், வியா. ‘ஆலயப்பிரவேசம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் பிறமதத்தவர்களும் அரசியல்வாதிகளும் தலையிடுவது இப் பிரச்னைக்கு சமாதானமான முடிவை ஏற்படுத்திவிடாது. இதனை இந்துக்களாகிய நாங்கள் கோயில்வழிபாடு செய்பவர்களையும், தர்மகர்த்தாக்களையும், பூசகர்களையும் சந்தித்து சமாதானமானமுறையில் தீர்வுகாண்பதே சிறந்த வழி. இந்தப் பொறுப்பை அகில இலங்கை இந்து இந்து மாமன்றம் பொறுப்பேற்றுள்ளது. இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்றத்தினர் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக ஆராய்வதற்காக கூடிய விசேஷ கூட்டத்தில் தலை

[6-ம் பக்கம் பார்க்க)

## பரீட்சைக்கு வந்த மாணவர்கள் ஏமாற்றத்துடன திரும்பினர்

யாழ்ப்பாணம், புதன் தொழில்நுட்பக் கல்லூரி பிரவேசப்பரீட்சை எழுதச் சென்ற 12 மாணவர்கள் பரீட்சை எழுதாது ஏமாற்றத்துடன் திரும்பினர். பரீட்சை அதிகாரிகள் வராததுதான் இதற்கு காரணமாம்.

அம்பாறை ஹார்டி தொழில்நுட்ப கல்லூரி, இலங்கை தொழில்நுட்ப கல்லூரி, கட்டுப்பொத்தை பொதுஅறிவியல் கல்லூரி ஆகியவற்றில் சேருவதற்கான பிரவேசப்பரீட்சை நேற்றுக்காலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

பரீட்சார்த்திகள் நேற்றுக்காலைமுதல் 12 மணிவரை பரீட்சை நடக்கும் மண்டபத்தில் காத்துநின்றனர். பரீட்சை அதிகாரிகள் வராததால் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.

## தலைமறைவு நாகர் சீன சென்றனர்

### ஆயுதம் பெறுவதற்கு என்கிறார் திரு. சக்ளா

புதுடில்லி, ஏப்ரல் 11

தலைமறைவு நாகர் கோஷ்டி இரண்டு, சீனவுக்கு ஆயுதம் பெறும் நோக்கமாகச் சென்றுள்ளதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக இந்திய வெளியுறவு மந்திரி திரு. சக்ளா இன்று லோக சபையில்தெரிவித்தார்.

இந் நாகர் கோஷ்டியினர் ஆயுதந் தரித்தவர்களாவர். இவர்கள் இந்தியாவில் நாசவேலைகளில் ஈடுபடச் சதிசெய்ததாகவும், சீனவில் ஆயுதமும், ஆயுதப் பயிற்சியும் பெறவே இவர்கள் சீன சென்றிருப்பதாகவும் அவர் மேலும் பேசுகையில் கூறினர்.

இந்த இரண்டு கோஷ்டிகளில், முதலாவது கோஷ்டி 100 முதல் 150 பேரைக் கொண்டதாகவும், இரண்டாவது கோஷ்டி 27 பேரை அடக்கியுள்ளதாகவும் திரு. சக்ளா தெரிவித்தார். இந் நாகர் கோஷ்டியினர், பர்மா பிராந்திய வழியாகவே சீன சென்றுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளிலிருந்து ஆயுத உதவி பெறுவதில்லை என்ற வாக்குறுதியை தலைமறைவு நாகர்கள் மீறிவிட்டதாகவும், அதற்காகத் தாம் மனம் வருந்துவதாகவும் திரு சக்ளா கூறினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பையொட்டி 14-4-67 வெள்ளிக்கிழமை ஈழநாடு காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் 15-4-67 சனிக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

## மணிவாக்கு

சுயநலமற்ற உணர்ச்சியுடன் பிறருக்காகக் காரியம் செய்யும்போது நாம் உண்மையில் இன்பமடைகிறோம். நம் உள்ளத்தில் அன்பு நிறைந்திருந்தாலே அவ்விதம் நாம் செய்ய முடியும். நமக்கு அன்பு வடிவாக இருப்பவரே கடவுள்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு பங்குனி மீ 29உ (12-4-67)


## விஞ்ஞான கல்வி

வடமாகாணத்தில்தான் என்ஜினியர்களும், டாக்டர்களும், விஞ்ஞானிகளும் அதிகமாக இருக்கிறார்களென்பதை சமீபத்தில் திரட்டிய புள்ளிவிபரங்களிலிருந்து கல்வி அமைச்சரும் தாமும் 'கண்டுபிடிப்பு' செய்திருப்பதாக உதவி கல்வி அமைச்சர் காமினி ஜயசூரியா பேசிவருவது வேடிக்கை மட்டுமல்ல வேதனையளிப்பதுமாகும்.

தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதையே நோக்கமாகக் கொண்டு வடபகுதி எம். பி.க்களின் உதவியுடனும் அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தைச் சேர்ந்த உதவிக் கல்வி அமைச்சர் வடபகுதியில்தான் டாக்டர்களும் என்ஜினியர்களும் அதிகமென்று 'பொருமு'ப்படுவதும், வடபகுதியில் உள்ள விஞ்ஞானக் கல்வி வசதிகளைக் குறைப்பதென்றும் விஞ்ஞான ஆசிரியர்களை வடபகுதிக்கு வெளியேயுள்ள இடங்களுக்கு மாற்றிவிட வேண்டுமென்றும் கூறுவதும் விவேகமற்றதுடன் அற்பத்தனமானதுமாகும்

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பட்டதாரிகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என்ற கிளர்ச்சிக்கு பல்கலைக்கழகம் செவிசாய்க்க மறுத்தது. இதன் விளைவாக கலைப்பட்டதாரிகளே பெருமளவில் உருவாக்கப்பட்டனர். இதனால் வடபகுதி மாணவர்கள் இந்தியாவுக்குச் சென்று விஞ்ஞானக்கல்வி பெற்று விஞ்ஞானப்பட்டதாரிகளாக வந்தனர். இலங்கைப்பல்கலைக் கழகம் விஞ்ஞானப்பட்டதாரிகளை உருவாக்கத் தவறிய போதிலும் அந்தக் குறையை இந்தியா சென்று படித்துத் திரும்பியவர்கள் நீக்கினர். ஆனால் சிங்களமொழி மூலம் கல்வி போதிக்கும் நிலைவந்ததும் தென்னிலங்கைக் கல்லூரிகளில் விஞ்ஞானக்கல்வி ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள் தமிழ்ப் பகுதிகளுக்குத் திரும்பவேண்டியதாயிற்று. தென்னிலங்கையில் விஞ்ஞானக் கல்விப் போதனைக்கு இருந்த சிறுவசதியும் இல்லாமற் போயிற்று. இத்தசமயம் வடக்கு, கிழக்குப் பகுதியில் நிலவிய விஞ்ஞான ஆசிரியர்களின் தட்டுப்பாடு ஓரளவு நீங்கியது. ஆயினும் வடபகுதி விஞ்ஞான ஆய்வுகூட வசதிக் குறைவும் ஆசிரியர் பற்றாக்குறையும் இன்னும் தொடர்ந்து நிலவுகிறது.

இந்நிலையில் வடபகுதியில் உள்ளவர்கள் விஞ்ஞானக்கல்வி பெற்று முன்னேறுவதால் அதைத் தடைசெய்யவேண்டுமென்று சிலர் கருதி காரியங்கள் செய்வது என்ன நல்லெண்ணமோ? தென்னிலங்கையில் விஞ்ஞானக்கல்விக்கு ஊக்கமளித்து எஞ்ஜினியர்களையும், டாக்டர்களையும் உற்பத்திசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். இதைவிடுத்து 'வடக்கு வளர்ந்து விட்டதே' என்று வயிற்றெரிச்சல் படுவதால் என்ன பயன்?

கல்வி அமைச்சரும் உதவிக்கல்வி அமைச்சரும் வடக்கின் விஞ்ஞானக்கல்வி வளர்ச்சிபற்றிப் பொருமைப்படுவதும் அதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுப்பதும் ஊர்காவற்றுறைத்தொகுதிப் பிரதிநிதி திரு. வி. நவரத்தினம் கூறுவதுபோல் தமிழ் இனத்தின் முன்னேற்றத்துக்குக் குழி தோண்டும் வகுப்புவாத முயற்சியாகவே இருக்கலாம். கல்வி அமைச்சர்களின் இந்த நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்கப் பிரதமர் முன்வருவது தேசிய ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்கு அவசியமாகும்.

# இன்று இஸ்லாமிய வருடப்பிறப்பு

## முஹர்ரம் புத்தாண்டு தினம்

-அ. நஜிமுத்தீன்-

இன்று முஹர்ரம் புத்தாண்டு தினம். ஹிஜ்ரி 1387-ம் ஆண்டு முஹர்ரம் முதல்தினமான புதுவருடம் எமக்கு பெரும் படிப்பினைகளையும் போதனைகளையும் வாரிவழங்குகிறது. இத்தினம் இற்றைக்கு 1387 வருடங்கட்கு முன்னர் நபிகள் நாயகம் ரஸூலேகரீம் [ஸல்] அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு 'ஹிஜ்ரத்' சென்ற சம்பவத்தை நினைப்பூட்டுகிறது. ஆகவே ஹிஜ்ரத்தின் ஏற்றமிகு எதிரொலிகளை எண்ணிப்பார்ப்போம்.

அன்பு, பண்பு, அறநெறி, நல்லெண்ணம் முதலியன இல்லாத அக்காலக்குருமிகட்கு எம்பெருமானார் [ஸல்] அவர்களின் போதனை கசந்ததுமட்டுமன்றி அது பசப்பு வார்த்தையென்று பிதற்றியவர்களாய் அவர்களை நசுக்கவும் ஆரம்பித்தார்கள். அதன்பெறுபேருகப் பல தந்திரோபாயங்கள் கையாளப்பட்டும், நபிகள் [ஸல்] ''சூரியனைக் கொணர்ந்து எனது வலது கரத்திலும், சந்திரனைக் கொணர்ந்து எனது இடக்கரத்தில் வைத்தாலும் என் சன்மார்க்க பிரசாரத்தை கைவிட்டுவிட போவதில்லை'' என ஆணித்தரமாக சங்கற்பம் செய்தார்கள். இவ்வறமொழி அப்பிறவிகட்கு எரிகிற நெருப்பில் எண்ணை வார்த்தது போன்றிருந்தது. ஆவேசத்தோடு அக்கிரமம் புரிய நினைத்துக் கிளர்ந்தெழுந்தார்கள். அண்ணல் நபி [ஸல்] அவர்களைக்கொல்வதற்காக அவர்களின் இல்லத்தை முற்றுகை இட்டார்கள். ஆனால் உலகைப் படைத்துப் போஷித்துப் பரிபக்குவப்படுத்தும் ஏக இறைவன், அவனது இணையற்ற இறுதித் தூதர் அண்ணலாருக்கு இன்னல்வரும்போது மௌனமாக இருக்கவில்லை. இச்சூழ்ச்சித்திட்டத்தை அவர்கட்கு அறியப்படுத்தி, சதிகாரனின் வலையில் சிக்காமல் மதிநுட்பத்தால் வெளியில் நழுவவிட்டுவிட்டான். தன்னருந்தோழர் அபூபக்கர் [ரலி] அவர்களுடன்.

ஆனால் அண்ணலும் அபூபக்கர் [ரலி]யும் ''தௌர்'' எனும் மலைக்குகையில் ஒளிந்திருந்தார்கள். எதிரிகள் அங்குமிங்கும் சென்றுவிட்டார்கள். அவர்கள் சக்தி இறைசக்திக்கு முன்நிற்குமா? முடியவே முடியாது. சிலந்திப் பூச்சிகளைத் தூண்டிவிட்டு வலைபின்னவைத்தது தான் அல்லா ஆம். மட்டற்ற காலப்பழமை வாய்ந்ததாகவும் மிகப் பெருந்தொகையானதாகவும் தோற்றமளித்தது அதன் வலை. விரோதிகள் விரைந்தனர். இதனைக் கண்ணுற்ற இதன் தன்மையின் காரணமாக மனிதர் இக்குன்றினுட் புகமுடியாதென ஊகித்துவிட்டுச் சென்றார்கள். இவர்களின் காலடிச் சப்தம் கேட்ட தோழர் அபூபக்கர் ஆவிபிரிவது போன்ற அபார உணர்ச்சியெய்தினர். நடு நடுங்கியவர்களாய் ''நாம் இருவர் எப்படி இவர்களிலிருந்து தப்ப முடியும்'' என்றார்கள். ''நாம் மூவர் நம்முடன் அல்லா இருக்கும்போது ஏன் பயப்பட வேண்டும்'' என்ற நம்பிக்கைதளரா நன்மொழியை அபூபக்கருக்குப் புகட்டினார்கள். அண்ணலார் ஆம் அல்லாஹ் உதவி செய்தேவிட்டான். எதிரிகளின் எதிர்ப்பிலிருந்து தவறி மதீனா சென்றேகினார்கள் நாயகம் [ஸல்].

சகோதரத்துவம், ஐக்கியம், ஒற்றுமை, சமாதானம் ஆகிய தத்துவங்கள் பொதிந்த மாபெரும் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றுதவர்கள் ஏனைய நன்மைகள் செய்து பிரயோசனமில்லை.



## லண்டன பயணமானர்

அனலைதீவு, செவ்வாய்

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த எட்வெர்ட் இந்திரன் இரத்தினம் ஓட்டோமையில் என்ஜினியரிங் படிப்பதற்காக லண்டன் பயணமானர். போர்ணியோ அங்கிளியன்சேர்ச் பாடசாலையினது பழைய மாணவரானஇவர் புருணய் பெற்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தைச்சேர்ந்தஎட்வேட் கனகரத்தினம் தம்பதிகளின் மகனாவர்.

[5-ம் கலத் தொடர்ச்சி]

அரசர்கட்கும் இலங்கையில் இருந்த பிராமணக்குருமார் ஆன்ம ஈடேற்றத்திற்குப் பெரும் நன்மையைச் செய்துள்ளார்கள். போர்ச்சுக்கீசர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் முதலிய பிறதேசத்தவர் எங்களூரை ஆண்டபோதும் சைவத் தீபத்தையும், தமிழ்க் கலாசாரத்தையும் அணைந்துபோகவிடாமல் காத்தவர்கள் பிராமண சமூகக் குருமார்களேயாவர்.''

இப்படிப் போற்றும் இப்பெரியார் இலங்கையில் ஆலயப் பிரவேசத்தைச் சுமுகமாக நிறைவேற்றவேண்டுமென்று அறிவுறுத்திவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஃ ஃ ஃ

மூவரென இருவரெனமுக்
கண்ணுடை மூர்த்தி,
மாவின் கனிதூங்கும்
பொழில் மாதோட்டநன்ன
கரில்,
பாவம்வினை அறுப்பார்
பயில் பாலாவியின் கரை
மேல்,
தேவன்எனை ஆள்வான
திருக்கேதீச்சரத்தானே.
— சுந்தரமூர்த்தி
சுவாமிகள்

[மூன்று கண்களை உடைய மூர்த்தியாகிய திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள பெருமான், மாமரங்களின் கனிகள் தாழத்தூங்குகின்ற சோலைகளையுடைய, 'மாதோட்டம்' எனும் நல்ல நகரத்தில், பாவத்தையும் இருவினைகளையும் அறுக்க விரும்புவோர் பலகாலும் வந்து மூழ்கின்ற பாலாவியாற்றின் கரைமேல், மூவராகியும் இருவராகியும் முதற் கடவுளாகியும் நின்றுஎன்னை ஆள்பவனாகக் காணப்படுகின்றார்.]

## வாலிப முன்னணி கூட்டம்

உடுப்பிட்டி, செவ்.

உடுப்பிட்டி வாலிப முன்னணியின் விசேடகூட்டம் நெல்லியடியில் நடைபெற்றது. உடுப்பிட்டி எம்.பி திரு. மு. சிவசித்ம்பரமும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மேற்படி முன்னணியின் புதுவருகைக்களியாட்டு விழாபற்றியும் மாட்டு வண்டிச்சவாரிப் போட்டி பற்றியும் ஆராயப்பட்டது.

### கூ. மொ. வி. ஊழியர்

# அரசியல் உரிமையை வாபஸ் பெற மந்திரி உத்தரவு

கொழும்பு, செவ்வாய்

கூ. மொ. வி. ஊழியர்கள் இனிமேல் அரசியலில் பங்கெடுத்துக்கொள்ளக் கூடாதென்பதற்கமைய சுற்று நிருபமொன்று விரைவில் எல்லா கூ. மொ. வி. ஊழியர்களுக்கும் அனுப்பப்படவிருக்கின்றது.

அரசியலில் கூ. மொ. வி. ஊழியர்கள் பங்கெடுத்துக் கொள்வதால் நிர்வாகத் பல சீர்கேடுகள் நிலவுவதாகவும் கூ. மொ. வி. ஸ்தாபனத்தின் விதி ஒழுங்குகள் பாதிக்கப்படுவதாகவும் கடந்தவாரம் சந்தித்த கூ. மொ. வி. அதிபர்கள்கருத்து தெரிவித்துள்ளனர். இவ் விஷயம் ராஜாங்க மந்திரியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதும் அவர் உடனடியாக இச்சலுகையை வாபஸ் பெறும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகத்தெரியவருகிறது.

இதன்காரணமாக கூ. மொ. வி. ஊழியர்கள் இனிமேல் அரசியலில் ஈடுபட முடியாதென்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

# ஐயாறன் எழுதுவது

நேற்று ஒரு பெரிய டாக்டருடன் பேசிக்கொண்டிருந்தேன். பெரும் பதவி வகித்து ஓய்வுபெற்றவர். அவருக்கு ஒரு நோய்கண்டு பொறுக்கமுடியாத வலி. கொழும்புக்குச் சென்று பெரிய நிபுணரைக் கலந்து யோசித்ததில், அவர் உடனடியாகச் சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்றும் இன்றேல் ஆபத்தென்றும் கூறிவிட்டாராம். ஆபரேஷனும் ஆபத்தானதே. என்றாலும் வலி பொறுக்கமுடியாமல் இதற்கு உடன்பட்டுவிட்டார் நோய்கண்ட டாக்டர். சத்திர சிகிச்சைக்கான எல்லா ஏற்பாடுகளும் அநேகமாக முடிந்தன. அந்த டாக்டர் மிகவும் தெய்வ நம்பிக்கை உள்ளவர். அன்று காலை எழுந்து பிரார்த்தனை செய்தபின், அந்த நோயும் வலியும் ஆச்சரியமாக நீங்கிவிட்டதாயும், சத்திர சிகிச்சை செய்யவேண்டிய அவசியமே இல்லாமற்போயிற்றென்றும் ருசியான தமது கதையை ஆர்வத்துடன் விபரித்தார்.

டாக்டர்களையும், நிபுணர்களையும் தான் நம்மில் பலரும் பெரிதும் நம்புகிறோம். ஆனால் டாக்டர்களுக்கும் நிபுணர்களுக்கும்கூட நோய் வந்துவிடுகிறது. அவர்களும் நம்மைப்போல் கஷ்டப்படுகின்றார்கள். அவர்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு பெரிய சக்தி இருந்து, அவர்களது கணக்குகளையெல்லாம் மீறி அவர்களையும் ஆச்சரியமாகக் குணமாக்கிவிடுகிறது. அந்த டாக்டர் தமது சொந்த அனுபவத்தை விளக்கியதுடன், இதைப் பேப்பரில் போடும்படியும் கேட்டார்.

கேவலம் டாக்டர்களையும் நிபுணர்களையும் மருந்துகளையும் நம்புவதைவிட, நமக்குள்ளே ''நம்மிலும் இனியானுக, உயிர்ப்பாய் உயிர்ப்போந்து புக்கு நிற்கும்'' எல்லாம்வல்ல கருணாமூர்த்தியான அந்தக் கடவுளை உண்மையில் நம்பிவிட்டால், எவ்வளவு நன்மையெல்லாம் செய்ய அவர் காத்திருக்கிறார் என்பதற்கு, டாக்டரே சொன்ன இந்த உண்மைக் கதை நல்ல அத்தாட்சியல்லவா?

ஃ ஃ ஃ

''ஆன்ம தரிசனம்'' என்ற பெயருடனே சிவஸ்ரீ கணபதீசுவரக் குருக்களின் ஞாபகமாக வெளியிடப்பட்டுள்ள ஒரு நூல் கிடைத்தது. அதில் ''எனது குரு'' என்ற தலைப்பில் கொழும்பு புரக்டர் பெரியார் சிவசுப்பிரமணிய ஐயா, பிராமண குருமார்களைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்:

இலங்கையில் சைவசமயத்தைப் பல்லூழிகாலம் நிலைநாட்டிவந்த சமூகம் பிராமண சமூகமாகும். பிராமண சமூகம் இலங்கையில் இல்லாவிடில் சைவமும் தமிழும் புனிதமான நிலையில் இருந்திருக்கமாட்டா. தமிழ் அரசர்கள் இலங்கையில் செங்கோல் செலுத்திய காலம்தொடங்கிப் பிராமண சமூகம் தமிழ்மக்களுக்கும் சைவசமூகத்திற்கும் ஒரு வழிகாட்டியாக இருந்தது. டாக்டர் போல் ஈ பீரிஸ் இலங்கையில் பிறந்தவர். இவர் ஒரு சரித்திர ஆசிரியராயும் நீதிபதியாகவும் இருந்தவர். இவர் இலங்கையிலிருந்த பிராமண சமூகத்தினரின் திறமையையும் அவர்களது குருத்தொண்டையும் நன்கு எழுதியுள்ளார். தமிழ் அரசர்கட்கு மட்டுமல்ல, சிங்கள

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டட்லி சமாதான திட்டத்தை வடவியட்னும் நிராகரித்தது

## தொடர்ந்து முயற்சிசெய்ய பிரதமர் விருப்பம்

கொழும்பு,புதன்

இலங்கைப்பிரதமர் திரு. டட்லிசேனநாயகாவின் வியட்னும் சமாதான ஆலோசனைகளை ஹனேய் நிராகரித்துவிட்டது,

இந்த ஆலோசனைகள், பீகிங்கிலுள்ள இலங்கைத்தூதுவர் திரு.ரொபேர்ட் குணவர்த்தனவின் வடவியட்னும் விஜயத்தின்போது தெரிவிக்கப்பட்டன-

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா. பொதுக்காரியதரிசி யுதாண்டிடம் பிரதமர்திரு.சேனநாயகா இவ் வாலோசனைகள் பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார்.

திரு.சேனநாயகாவின்திட்டத்தின் சாராம்சம் என்னவெனில், வியட்னும்பிரச்னை ஓர் உள்நாட்டுப்பிரச்னைஎன்பதேயாகும். அப்பிரச்னையைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு வட வியட்னுமையும் தென்வியட்னுமையும் சார்ந்ததாகும். இப்பிரச்னையில்அந்நிய தலையீட்டுக்கு இடமே இல்லை. இக்கருத்துக்கள்டங்கிய திட்டம்தான் வடவியட்னுமிடம் இலங்கையினுல் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆனுல் இந்த ஆலோசனைகளை நிராகரித்துள்ள வட வியட்னும், வியட்னும் சமாதானத்துக்கு முதற்படியாக அமெரிக்க துருப்புக்கள் வியட்னுமை விட்டு வெளியேற வேண்டுமெனக் கூறியுள்ளதுடன், எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் வியட்காங்கியரும் இடம்பெறவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

வடவியட்னும் தமது சமாதானத்திட்டத்தை நிராகரித்துள்ள போதும், தாம் வியட்னும் சமாதானத்துக்கு தொடர்ந்து உழைக்கப் போவதாகப் பிரதமர் திரு. டட்லிசேனநாயகாதெரிவித்துள்ளார்.

---

உபராஷ்டிரபதி பதவிக்கு

## எதிர்க்கட்சிகளின் ஏகமன தேர்வு

### அவசியம் எனகிருர் அலிகார் துணைவேந்தர்

மாஸ்கோ. ஏப். 11

எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்று சேர்ந்து தமது பெயரைப் பிரேரித்தாலன்றித் தாம் இந்திய உப ராஷ்டிரபதி பதவிக்கு நிற்கப் போவதில்லை என்று நவாப் அலிஜாவார் ஜங், இங்கு ஒரு பத்திரிகை நிருபரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினுர்.

தற்போது ரஷ்யாவுக்கு விஜயம் செய்துள்ள அலிகார் பல்கலைக் கழகத்துணை வேந்தரான நவாப் அலி ஜார்வார் ஜங், எதிர்கட்சிகளினுல் உப ராஷ்டிரபதிப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் அபேட்சகராவார்.

உப ராஷ்டிரபதி பதவியின் கடமைகளும், பொறுப்புகளும் மகத்தானவை என்றும், அத்தகைய பொறுப்பு வாய்ந்த பதவிக்குப் போட்டியிடும் போது, ஏகமனத் தேர்வு இருக்க வேண்டியது அவசியமெனத் தான் கருதுவதாகவும் நவாப் அலி ஜாவார் ஜங் மேலும் தெரிவித்தார்.

---

### கோபிகிருஷ்ணுவின் உலக சாதனை

பம்பாய், ஏப். 11

இந்திய நடனக் கலைஞர் கோபி கிருஷ்ணு, நாட்டியத்தில் ஓர் உலக சாதனையை நிறுவியுள்ளார். இவர் தொடர்ந்து 9 மணி 12 நிமிடநேரம் நடனமாடியுள்ளார். நேற்று பிற்பகல் 2 மணிக்குப் பம்பாயில் நடனமாடத் தொடங்கிய இவர், 9 மணித்தியாலம் 12 நிமிடங்களுக்குப் பின்னரே தமது நடனத்தை நிறுத்தினுர். நடனம் முடிவடைந்த பின்னரும், கோபி கிருஷ்ணு சோர்வின்றி, உற்சாகத்துடன் காணப்பட்டார்.

---

### 66 வயதில் பிள்ளை பெற்ருர்!

மாஸ்கோ, ஏப்ரல் 11

ரஷ்யாவில் குஹோலி மாவட்டத்திலுள்ள குவடயா கிராமத்தைச் சேர்ந்த 66 வயதான ஸுலைக்கின் என்ற மாது அண்மையில் ஒரு பெண்மகவைப் பெற்றெடுத்துள்ளார். இவரது கணவரான நுரி பெரிட்ஸேயினுக்கு வயது 79. இவர்களது மூத்தபுதல்வி யெஸ்ஸாவுக்கு வயது 30.

---

லண்டனில்

### வியட்னும்போர் எதிர்ப்பு கண்காட்சி

லண்டன், ஏப். 11

வியட்னும் போர் எதிர்ப்புக்கண்காட்சி ஒன்றை இங்குள்ள இடதுசாரி ஸ்தாபனங்கள் ஒழுங்கு செய்துள்ளன. இக்கண்காட்சியில் அமெரிக்க விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி இடிந்த வடவியட்னும் கட்டிடங்கள் சிலவற்றின் புகைப் படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. வடவியட்னும் பிரதிநிதி ஒருவரை இக்கண்காட்சியில் பற்குபற்ற அனுமதிக்குமாறு இவ்விடதுசாரி ஸ்தாபனங்கள் கோரியிருந்தன. ஆனுல் இக்கோரிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் மறுத்துவிட்டது,

---

### ராஜாஜி குணமடைகிருர்

சென்னை, ஏப். 11

குடல் இறக்க வியாதிக்காக ராஜாஜிக்கு சத்திர சிகிச்சை அண்மையில் நடைபெற்றது வாசகர்களுக்குத் தெரிந்ததே. அவரது உடல் நிலை திருப்திகரமான முறையில் அபிவிருத்தி அடைந்து வருவதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

---

### தீ விபத்தில் 400 வீடு நாசம்

கோஹட்டி, ஏப். 11

அஸ்லாம் மாங்கிர் ஜில்லாவின் காம்பூரில் நடந்த வாரச்சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 400 வீடுகளும், கிடங்குகளும், கடை களும்அழிந்தன.

தீ பரவியசமயம், சந்தைக்கு வந்திருந்த சுமார் 30-000 பேர் பீதியடைந்து ஓடினுர்கள். பலமணி நேரம் தீயணைப்பதில் தீயணைப்புப் படை ஈடுபட்டிருந்தது. உயிர்ச்சேதம் எதுவும் இல்லை.

இவ்விபத்தால் சொத்து நஷ்டம் ரூபா 25 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

---

### அமெரிக்க நர்சுகள் வாபஸ்

ஹியு [தெ. வியட்னும்] ஏப்ரல் 11

இங்கு வியட்காங்கியரின் நடவடிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்து, அமெரிக்க நர்சுகள் இங்கிருந்து வாபஸ் பெறப்பட்டனர்.

அருகில் உள்ள குவாங்டிரி என்னுமிடத்தில் கடந்தவியாழக்கிழமை வியட்காங்கியர் தாக்குதல் நடாத்தினர். அப்போது அவர்கள் 126 தென் வியட்னுமியரையும், 10 அமெரிக்க துருப்புகளையும் கொன்றனர். சிறையிலிருந்து 250 கைதிகளை விடுவித்தனர்,

---

### சர்வதேச புகைப்படக் காட்சி

கி. பெர்லின், ஏப்ரல் 11

'மனிதனின் மகிழ்ச்சி' என்ற தலைப்பில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் அடுத்த நவம்பரில் நடாத்தப்படும் சர்வதேசப் புகைப்படக் கண்காட்சியில் கலந்துகொள்ளுமாறு உலகம் முழுவதுமுள்ள புகைப்படக்காரர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு புகைப்படக்காரரர்கள் ஏற்கனவே வெளியான தமது புகைப்படங்கள் 10 வரையும், வெளியிடப்படாத படங்கள் 10 வரையும் காட்சிக்கு வைக்கலாம். மக்களின் வாழ்க்கை முறைகளைச் சித்தரிக்கும் புகைப்படங்களைக் கொண்ட ஒரு புத்தகக்கண்காட்சியின் போது தயாரிக்கப்படும்.

---

### குளிர்த்தி விழா

உடுவில், செவ்வாய்

அளவெட்டி பெருமாக்கடவை ஸ்ரீ துர்க்கையம்பாள் ஆலயத்தின் வருடாந்த குளிர்த்திவிழா நேற்றுச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றுகாலைமுதல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அன்னதானமும்நடைபெற்றன. மாலையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீஸ்வாமிநாதத்தம்பிரான் ஸ்வாமி அவர்களால் ''பக்த அனுசூயா'' என்னும் விஷயம்பற்றிய கதாகாலக்ஷேபமும் நிகழ்ந்தது.

---

## 'மந்திரியாக விரும்புங்கள்'

### மாணவர்க்கு சாவகச்சேரி எம. பி. அறிவுரை

சாவகச்சேரி, செவ்.

''பாடசாலைகளில் பிரதம விருந்தினராக ஓர் அமைச்சரை வரவழைக்கும் போது அவர் வந்து பேசும் பேச்சுக்கள், அவருக்களிக்கும் மரியாதை ஆகியனவற்றை மாணவர் பார்த்து அவர் போல் நானும் ஒரு காலம் வரவேண்டும் என்ற எண்ணம் எழ வேண்டும். அப்போதுதான் மாணவ மாணவியர்களுக்கு ஊக்கமும் உணர்ச்சியும் ஏற்பட முடியும். பெற்ருேர்கள் தம்பிள்ளைகளைப் பாடசாலைக்கனுப்பிக் கல்விபுகட்ட விரும்புவது இயற்கை சர்வசாதாரணம். ஆனுல் பிள்ளைகளும் பெற்ருேரின் ஆசையை நிறைவேற்றவும் தம் வருங்கால வாழ்விற்காகவும் அறிவு வளர்ச்சிக்காகவும் ஊக்கத்துடன் கல்வி பயில வேண்டும்.''

இவ்வாறு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது சாவகச்சேரிப் எம், பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கூறினுர்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வித்தியாதிபதி திருமதி ஆர். நவரத்தினம் பேசுகையில், ''காரியமே கண்ணுகவும் தன்னிடத்தும் இறைவனிடத்தும் மற்ற உலக ஜீவராசிகளைனத்தினிடத்தும் அன்பாயிருந்தால் எடுத்த காரியம் வெற்றி பெறும். அதே போல் கல்வியிலும் தேர்ச்சி அடையலாம்'' என்று கூறினுர்.

---

### 300கோடிடொலர் யு. எஸ். உணவு உதவி

வாஷிங்டன், ஏப்ரல் 11

300 கோடி டாலருக்கு மேல் மதிப்புள்ள யு. எஸ். அரசாங்கத்துக்குச் சொந்தமான உணவுப்பொருள் சென்ற 17 ஆண்டுகளிலே 139 நாடுகளில் வாழும் மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருக்கிறது. யு. எஸ்.அரசாங்கவேளாண்மை இலாகா இவ்வாறு கூறுகின்றது.

இந்த உணவு நன்கொடை திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்பெற்ற உணவு, தனியாகும். அரசாங்கத்துக்கு அரசாங்க அடிப்படையிலோ, ஐ.நா. உணவு வேளாண்மை நிலையத்தின் உலக உணவுத் திட்டத்தின் கீழிலோ அமெரிக்க அரசாங்கம் வழங்கியுள்ள உணவுகளுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

தென் ஆசிய நாடுகளும் மத்திய கிழக்கு நாடுகளும் இந்த நன்கொடைத் திட்டத்தின்கீழ் 63 கோடி 84.6 லட்சம் டாலர் மதிப்புள்ள 500 கோடி ருத்தல் உணவுப் பொருள்கள் பெற்றிருக்கின்றன.

---

### இயந்திரம் மூலம் விவசாயம்

லீப்சிக், ஏப்ரல் 11

இயந்திரங்கள் மூலம் உற்பத்தியைப் பெருக்கும் நவீன விவசாய இயந்திரங்கள் அனைத்தும் சென்ற மாதம் லீப்சிக்கில் நடைபெற்ற சர்வதேச பொருட்காட்சியில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வைத்திருந்தது. விதைத்தல், காயவைத்தல், சூடு பிடித்தல், தூசி அகற்றுதல், உரமிடுதல் முதலியவற்றைச் செய்வதற்கான நவீன இயந்திரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு 30 நாடுகளுக்கு நவீன விவசாய இயந்திரங்களை ஏற்றுமதிசெய்துவருகிறது. 1966ல் மாஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச விவசாய இயந்திரப் பொருட்காட்சியில் மத்தொழிலை இயந்திரமயமாக்குவதற்கான சகல இயந்திரங்களையும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு காட்சிக்கு வைத்தது.

---

### விவசாயிகளுக்கு..

சங்கானை, செவ்வாய்

கடந்த வருடம் விவசாய விஸ்தரிப்பு நிலையத்தினர் வெளிநாட்டிலிருந்து வரவழைத்த விதை உருளைக் கிழங்கு பற்ருக்குறையாக இருந்ததால், இச் செய்கையில் ஆர்வமுள்ள சில விவசாயிகள் அதைப்பெற்றுக் கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டது.இக்குறையை நிவர்த்தி செய்வதற்குக் கிழங்குச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் ஏற்கனவே தங்கள் தங்கள் கூட்டுறவுச் சமாசங்களில் தேவையான விதைக்கிழங்குகளைப் பதிவுசெய்து முற்பணம் கட்டும்படி வலி—மேற்குப் பகுதியில் உள்ள பயிர்ச்செய்கைக் குழுக்களுக்கும் விவசாயிகளுக்கும் அறிவித்தல் ஒன்றை விவசாய விஸ்தரிப்பு நிலையத்தினர் விடுத்துள்ளனர்.

---

### 'வள்ளுவர் விழா கொண்டாடுக'

கிளிநொச்சி, செவ்வாய்

''தமிழ்மறைக் கழகத்தின் வேண்டுகோளை ஏற்றுச் சென்ற பதினைந்து ஆண்டுகளாகத் திருவள்ளுவர் திருநாளை மே மாதம் கொண்டாடிவந்த உலகமெங்குமுள்ள பெருமக்களுக்கு நன்றி. இந்த ஆண்டும் மே 23 ஐ மிகச் சிறப்பாகக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்ளுகின்ருேம்'' எனத் தமிழ்மறைக் கழகத் தலைவரும், உலகத் தமிழ்மன்றத் தலைவருமான திரு. கா. பொ. இரத்தினம் பா. உ. உலகெங்குமுள்ள தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வேண்டுகோளில்அவர் மேலும் கூறுவதாவது:-

''சென்ற ஆண்டில் தமிழ் நாட்டு அரசினரும் மே மாதத்தில் வள்ளுவர் திருநாளை அரசாங்க விடுமுறை நாளாக்கியுள்ளனர். இவ்வாண்டில் வள்ளுவர் திருநாளைத் தமிழ்நாட்டரசினரையும் கொண்டாடுமாறு கேட்டுள்ளோம்.

1969இல் திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு நிறைவு விழா வருகின்றது. இந்த விழாவை 1969 மேமாதம் முழுவதும் உலகமெங்கும் சிறப்பாகக் கொண்டாட இப்பொழுதே திட்டங்கள் வகுக்கவேண்டுமென்றும் உலகெங்கும் வாழும் தமிழ்ப் பெருமக்களைக் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

---

### விவசாயப் படை தேர்வுப் பரீட்சை

பண்டத்தரிப்பு, செவ்

தெல்லிப்பழை காரியாதிகாரிகந்தோரில்நடைபெற்ற விவசாயப் படைக்கான நேர்முகப்பரீட்சைக்கு 300க்கும் அதிகமான இளைஞர் சமுகமத்ளிதிருந்தனர்.

இவர்களில் பெரும்பாலானேர் வாகனம் ஓட்டுதல் தச்சுவேலை, மேசன் வேலை என்பவற்றில் தகைமையுள்ளவர்களென எண்ணப்பித்திருந்தனர். நாட்டின் பல பகுதிகளிலும் காரியாதிகாரி கந்தோர், கிராமசபைக் கந்தோர் ஆகிய இடங்களில் இதற்கான நேர்முகப் பரீட்சைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாஜக் கூட்டம்

கோப்பாய், செவ்.

வலி-கிழக்குப் பகுதி பயிர்ச் செய்கைக் குழுக்களின் சமாஜக் கூட்டம் திரு. சி. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

விவசாயிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு உழவு யந்திர நிலையம் ஒன்றினை வலி-கிழக்குப் பகுதியில் அமைத்துத் தருமாறு அரசாங்கத்தைக் கோருவதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## நேர்முகப் பரீட்சை

பண்டத்தரிப்பு, செவ்.

விவசாயப் படைக்கு இப்பகுதியிலிருந்து விண்ணப்பித்த இளைஞர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறவிருக்கிறது. இப் பரீட்சை பண்டத்தரிப்புக் கிராமசபைக் கந்தோரில் இன்று நடைபெறும் என அறியப்படுகிறது.

## நூற்றுண்டுவிழா

பண்டத்தரிப்பு, செவ்.

கடந்தவாரம் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள கிறிஸ்தவ சகோதரர்கள் தமது சேவையின் நூற்றுண்டு விழாவைக் கொண்டாடினர். மகா. வந்த. கருதினல் தோமஸ்கூரே ஆண்டகையும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டார்,

## இலங்கை ஒலிபரப்பு கூட்டு ஸ்தாபனம்

**புதன் 12-4-67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**341 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா- சிறுவர் நிகழ்ச்சி.

6-15 பாட்டு, 6.45 கிராம சஞ்சிகை. 7-15 வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 விவாத மேடை, 10-00 நேயர் விருப்பம்.

## 'அரசாங்கத்தை நம்பி யிருப்பதில் பயனில்லை' —உடுப்பிட்டிஎம. பி.

உடுப்பிட்டி, செவ்.

'நாடுபூராவும் சிரமதான இயக்கம் துரிதவளர்ச்சியடைந்து வருகின்றது. இப்பணியில் நாட்டு மக்கள் உற்சாகத்துடன் பங்குபற்றிவருகின்றனர். இதற்குக் காரணம் நாட்டு மக்களிடையே இன்று தோன்றியுள்ளபுத்துணர்ச்சியும். தேசாபிமான முமேயாகும்' என்று வடமராட்சிக்காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதன் கரவெட்டி சிந்தாமணி சனசமூகநிலைய ஆதரவில் நடைபெற்ற சிரமதான இயக்கத்துக்கு தலைமைவகித்துப் பேசுகையில்கூறினார். தச்சன் தோப்புக்கிளை ஒழுங்கைகளை சிரமதான மூலம் திருத்தும் பணியில் இளைஞர்களும்முதியோர்களும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். இவ்வியக்கத்தை உடுப்பிட்டி எம்.பி. திரு. மு. சிவசிதம்பரம்ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், 'எமது தேவைகளை நாம்தான் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். அரசாங்கத்தை நம்பியிருப்பதில் பயனில்லை. பண்டைய காலத்தில் எமதுமுன்னோடிகள் கூட்டுறவு அடிப்படையில் சமுதாயமாக வாழ்ந்து வாழ்க்கையில்முன்னேறினார்கள்' என்று கூறினார்.

இவ்வியக்கத்தில் கிராம முன்னேற்ற அதிகாரி திரு. கே. நவரத்தினராசா, பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வீ. செல்லையா நாடகக் கவிமணி எம். வீ. கிருஷ்ணுழ்வார், மேல்கரவை கி.சே. திரு. க. இரத்தினசிங்கம். திரு. எஸ்.பி. தேவசகாயம் ஜே.பி, கி.மு.ச. தலைவர் திரு. சி. வேலுப்பிள்ளை ஆகியோரும்வேறுபலரும் பாராட்டிப் பேசினர்கள்.

செயலாளர் திரு. சி. சே. நடராசா நன்றி கூறினார்.

## திருத்தியமைக்க நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்

ஐந்துகூட்டு ஸ்தாபனங்களை விரைவில் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகளை திரு. பிலிப்குணவர்த்தன மேற்கொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனங்கள் சிறந்தமுறையில்இயங்கவேண்டுமென்றநோக்கத்துடனேயே இப்புதிய மாற்றம் நிகழவிருக்கின்றது.

புத்தாண்டை புனிதமுடன்
கொண்டாட
உங்களுக்குத் தேவையான
எல்லா விதமான
ஜவுளி வகைகளும்
றெடிமேட் உடுப்புகளும்
கண்கவர் கலர்களில்
பலவித ரகங்களில்
ரெர்லின் சேட்வகைகளும்
பெற்று மகிழ
இன்றே விஜயஞ்செய்யுங்கள்!
ராஜ்கோபால்ஸ்
36/1, பெரியகடை — யாழ்ப்பாணம்
போன்: ———— 7168

## மட்டுவில் கொலைவழக்கு விசாரணை

சாவகச்சேரி, செவ்

''கொலையில் மாண்டவர் எனது மூத்தசகோதரர். சம்பவதினம் மாலை 6-30 மணிக்கு இவருடைய வீட்டிற்கு யார்வேலிக்கம்பி வெட்டியதெனக் கேட்கப்போனேன். எதிரிகளிருவரும் இவர்களுடன் மற்றும் ஐயாத்துரை, சின்னத்தம்பி, தங்கராசா ஆகியோரும் பேசினர்கள். நான் விதானையார் வீட்டிற்குப்போய் பின் பொலிஸ் நிலையத்திலும் புகார்செய்துவிட்டு எனது வீட்டிற்கு போனபோது எனதுதாயார் சகோதரன் சின்னத்தம்பி எதிரிகளாகிய தம்பு, சின்னப்பு ஆகிய இருவராலும் வெட்டுப்பட்டதாகவும், முதல் எதிரி பிடிக்க இரண்டாம் எதிரி குத்தியதாக இறந்த சகோதரர் சின்னத்தம்பி கூறியதாகவும் சொன்னர்.'

இவ்வாறு மட்டுவில் தெற்குக்கொலைவழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் மீண்டும் விசாரணைக் கெடுக்கப்பட்டபோது சாட்சியமளித்த இறந்தவரின் சகோதரர்கணேசு[26வயது] என்பவர்கூறினர்.

இவ்வழக்கில் இவ்வருடம் பெப்ரவரி 18ம் திகதி மட்டுவில் வாசிகளான சுப்பன்-தம்பு, தம்பு-சின்னப்பு ஆகிய இருவரும்அதேஊரைச் சேர்ந்த நாகன் சின்னத்தம்பி[33 வயது] என்பவரைக் குத்திக் கொலைசெய்ததாக சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இறந்தவரின் மனைவி லட்சுமி [28 வயது] சாட்சியமளிக்கையில் இறந்த சின்னத்தம்பி எனதுகணவர். சம்பவதினத்தின் முன் பத்துநாட்களாகக் கணவரைப் பிரிந்திருந்தேன். எமக்கு மூன்று பிள்ளைகளுண்டு, நாம் பிரிந்திருந்தபோது பிள்ளைகள் கணவருடனேயே வாழ்ந்தனர். சம்பவதினம் அயல் வீட்டுப் பெண் பிள்ளையொன்றுவந்து ''தம்பனும் உன் கணவரும் சண்டைபிடித்து உன் கணவருக்குக் கடுமை; ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றுவிட்டனர்'' ரெனக் கூறினர்.

இம்மாதம் 22ம் திகதி வரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## நியமனம்

சுழிபுரம். செவ்.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் உடற்பயிற்சி ஆசிரியராகக்கடமையாற்றிய திரு க. அரிச்சந்திரா இம்மாதம் தொடக்கம் வலிமேற்குகாரியாதிகாரி பிரிவுக்கு உடற்பயிற்சி போதனசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

பண்டத்தரிப்பு, செவ்

இளவாலை கட்டளைக் குரவர் வண. பி. தியோகுப்பிள்ளை சுவாமியார் திருக்கோணமலை துணை மேற்றிராணியாராக இடமாற்றம் பெற்றதினுல் பெரியவிளான் கட்டளைக்குரவர் வண. துரைசிங்கம் இளவாலை கட்டளைக்குரவாரக நியமனம் பெற்றுள்ளார்.

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு, செவ்

சில்லாலைக் கட்டளைக்குரவர் வண. முகியே ப்ள்ளி முலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

உடுப்பிட்டி, செய்வாய்.

மூதூர் கிராம சபையில் காரியதரிசியாகக் கடமையாற்றிய திரு. எஸ். திருவ் பிள்ளை உடுப்பிட்டிக் கிராம சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

**வல்வைச்சம்பவம்**

## 'உடன் நடவடிக்கை எடுக்குக'

உடுவில், செவ்வாய்

''வல்வெட்டித்துறையில் பொலிஸாரும், இராணுவத்தாரும் பொதுமக்கள் மீது மிருகத்தனமான தாக்குதலை மேற்கொண்டதும், துப்பாக்கிச் சூட்டின் மூலம் ஒருவர் மரணமடைந்து, பலர் காயமுற்ற நிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதுவும் மிகவும் கண்டிக்கப்படவேண்டிய ஒன்ருகும். வல்வெட்டித்துறையில் இதற்கு முன்னும் பல தடவைகளில் இது போன்ற வன்முறைச் செயல்கள் பொலிஸாராலும், இராணுவத்தினராலும் பொதுமக்கள் மீது நடத்தப்பட்டிருக்கின்றன. உடனடியாக இந்த பலாத்கார சம்பவங்களையிட்டு விசாரணை நடத்தி பொது மக்களின் அச்சத்தைப் போக்குமாறும், வல்வெட்டித்துறையில் இருந்து இராணுவத்தினரை வாபஸ் பெறும்படியும் வேண்டிக் கொள்ளுகின்ருேம்.''

கந்தரோடை சனசமூக நிலையம் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவுக்கு இன்று அனுப்பி வைத்துள்ள ஒரு மகஜரில் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டுள்ளது.

## 'வேலம இப்படியுமா!?'

உடுவில், செவ்வாய்

''சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் என்றெல்லாம் கோஷமிட்டு வெற்றிப் பெருமிதத்தால் நாகரீகத்தின் உச்சியில் வாழ்கிருேமென கூறிக்கொள்ளும் நம் தமிழ் இனம் கேவலம் சாதி என்னும் பெயரைக் கொண்டு சமய வழிபாட்டில் ஒரு சாராருக்கு உயர்ந்த இடத்தையும் ஒரு சிலருக்கு குறைந்த இடத்தையும் கொடுத்து வாழவைப்பது 20-ம் நூற்றுண்டிலும் கூட அவர்கள் முன்னேற்றமடையாதவர்களே என்பதைத் தான் எடுத்துக் காட்டுகின்றது.''

உடுவிலில் நடைபெற்ற சாதி ஒழிப்பு பிரசாரக் கூட்டத்தில் திரு. ரி. தேவராஜன் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னர். திரு. எம். மகேசன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

திருவாளர்கள் கே. இராஜா, எம். கார்த்திகேசு, எஸ். கதிர்காமநாதன் ஆகியோரும் பேசினர்.

## 97பேருக்கு மீண்டும வேலை

நாவலப்பிட்டி, செவ்

வேலைநீக்கம் செய்த67 தொழிலாளர்களில் 53 பேருக்கு மீண்டும் வேலை கொடுக்க தொழில்கோர்டு தீர்ப்பளித்தது.

பரகலைத்தோட்டம் கைமாறியதைத் தொடர்ந்து வேலைநீக்கம் செய்த 97 தொழிலாளர்கள் குறித்து நாவலப்பிட்டி இ.தொ.கா. மாவட்டப்பிரதிநிதி ஜனப். எம், எச். ஏ. சத்ததார் பதிவு செய்த வழக்கில் 53 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைகொடுக்கும்படி ஹற்றன் தொழிற்கோர்டு நீதிபதிதிரு. ஈ. ஏ. விஜயகுலசூரியா' தீர்ப்புக் கூறினர்.

எஞ்சியவர்கள் சம்பந்தமாக 21-ந்திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## இடமாற்றம

உடுப்பிட்டி, செவ்வாய்

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய திரு. கந்தப்பு கரவெட்டி-மேற்கு றேமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கும், திரு. நல்லதம்பி கரணவாய்- தெற்கு, மணியகாரன் தோட்டம் சைவவித்தியாசாலைக்கும் இம் மாதம் முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## பிரிவுபசாரம்

உடுவில், செவ்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரியில் இருந்து அண்மையில் பிறபாடசாலைகளுக்கு மாற்றலாகிச் சென்ற திருவாளர்கள் எஸ். சிவஞானஐயர், எம். ராஜரத்தினம் ஆகியோருக்கு ஆசிரியர்களாலும்மாணவர்களாலும் ஒரு தேநீர், விருந்து பாடசாலையில்நடத்தப்பட்டது. ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் உட்பட பல ஆசிரியர்கள் மேற்படி இருஆசிரியர்களது்சேவையைப்பாராட்டிப் பேசினர்.

மாற்றலாகிய இரு ஆசிரியர்களும் நன்றி கூறினர்.

## பயிர் செய்கைக் குழுக்கூட்டம

காரைநகர், செவ்.

காரைநகர் மேற்கு பயிர் செய்கைக்குழுக் கூட்டம் தலைவர் திரு அ. கனகசபை தலைமையில் நடைபெற்றது. தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டனர்.

அடுத்தவருடம் விவசாயிகளுக்கு விதைநெல் எடுத்துக்கொடுக்கவும் விவசாய வேலைக்கான மண்வெட்டி முதலியனசங்கமே எடுத்துக்கொடுப்பதாகவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## அதிபரின் திட்டம்

பூநகரி, செவ்வாய்

அகிலஇலங்கைத் தமிழ் மறைக்கழகம் நடத்தும் தமிழ்மறைத் தேர்விற்குப் பூநகரி மகாவித்தியாலயத்திலிருந்து 120க்கு மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள், இத்தேர்விற்கு இவர்கள் பங்குபற்றுவது இதுவே முதல்தடவையாகும்.

அடுத்ததவணைத் தொடக்கத்தில் திருக்குறள் மனனப் போட்டியை இல்லங்களுக்கிடையே நடத்திப் பரிசளிப்பதன்மூலம் மாணவரைத் தமிழ்மறையில் ஈடுபடச் செய்வதற்கான திட்டமொன்றை அதிபர் மு. சிவானந்தம் வகுத்துள்ளார்.

## கைப்பணிப் பொருட்காட்சி

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை திருக்குடும்ப ஆங்கிலபாடசாலையில் கைப்பணிப் பொருட் காட்சி நடைபெற்றது. இப் பொருட் காட்சியில் மாணவிகளால் செய்யப்பட்ட பலவகைப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. பாடசாலை மாணவிகளுக்கு மட்டுமே இக்காட்சி நடைபெற்றது.

## அபிவிருத்தி

பண்டத்தரிப்பு, செவ்.

பண்டத்தரிப்பு பிராம்பத்தைச் சந்தியில் பெருந்தொகையான காணிகள் துப்புரவு செய்யப்பட்டு விவசாயம் செய்வதற்கு தயார் செய்யப்படுகிறது. இதே போன்றுஇன்னும் பல்வேறு தரிசு நிலங்கள் பண்படுத்தப் பட்டுவருகின்றன.

## புதுவருடத்தில் புதிய பஸ் நிலையம

உடுவில், செவ்.

சுன்னுகம் பட்டினசபையின் ஆதரவில் மிகப்பிரமாண்டமான முறையில் கட்டப்பட்டுவரும் நவீன வசதிகள் கொண்ட புதியபஸ் நிலைய வேலைகள் பூர்த்தியாகும் கட்டத்திலுள்ளன. புதுவருடத்தினத்தன்று இப்புதியபஸ்நிலையம் உத்தியோக பூர்வமாகத்திறந்து வைக்கப்படுமெனத் தெரிகிறது. பிரதம பொறியியல் வல்லுனர் திரு. நடேசன் புதிய பஸ் நிலையத்தைத்திறந்து வைப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம

### அடைவு நகைகள் ஏல விற்பனவு முன் அறிக்கை

எனது அடைவு கடையில் 31-3-66-க்கு முன் வைக்கப்பட்ட அடைவுகள் 30-4-67-க்கு முன் மீட்கப் படாவிட்டால் பகிரங்க ஏலத்தில் விற்க ஒழுங்கு செய்யப்படும்.

அ. தம்பிப்பிள்ளை
அடைவு பிடிப்பவர்
நெடுங்காடு,
1738 காரைநகர்.


உதைபந்தாட்டம்

## லீக் சுற்றுப் போட்டி ! சில முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கிளப்புகளுக் கிடையேயான ''லீக்'' சுற்றுப்போட்டியில் கடைசியாக நடைபெற்ற போட்டிகளின் சில முடிவுகள் பின்வருமாறு:

**'பி'பிரிவு**

கிறீன்பீல்ட் கோஷ்டிக்கும் நாவாந்துறை சென். மேரிஸ் 'பி' பிரிவு கோஷ்டிக்கும் நடைபெற்ற ஒருபோட்டியில் சென். மேரிஸ் 11—0 கோல்களால் கிறீன்பீல்ட் கோஷ்டியை தோல்வியடையச்செய்தது.

வல்வெட்டித் துறை புளூஸ் கோஷ்டிக்கும் வதிரி டைமன் கோஷ்டிக்கும் ஏற்பட்ட போட்டியில் வல்வெட்டித்துறை 4—1 கோல்களால் வதிரியை தோற்கடித்தது.

யாழ். மென் கைட்ஸ் கோஷ்டிக்கும் கிறீன்பீல்ட் 'பி' பிரிவு கோஷ்டிக்கும் ஏற்பட்ட காரசாரமான போட்டியில் கிறீன்பீல்ட் கோஷ்டி 3—2 கோல்களால் எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்தது.

வல்வெட்டித்துறை புளூஸ் கோஷ்டிக்கும் யங்மென்ஸ் கைட்ஸ் கோஷ்டிக்கும் ஏற்பட்ட மோதலில் வல்வெட்டித்துறை 4—0 கோல்களால் எதிர்க்கோஷ்டியை வென்றது.

வல்வெட்டித்துறை புளூஸ் கோஷ்டிக்கும் நாவாந்துறை சென். மேரீஸ் 'பி' பிரிவுக் கோஷ்டிக்கும் ஏற்பட்ட போட்டியில் இருசாராரும் கடுமையாகப் போட்டியிட்டு தலா 1—1 கோல்கள் பெற்று சமமாக ஆட்டத்தை முடித்தனர்.

குருநகர் ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்கும் பாஷையூர் சென். அந்தனிஸ் 'பி' பிரிவுக்கும் ஏற்பட்ட மோதலில் பாஷையூர் 2—1 கோல்களால் குருநகர்க் கோஷ்டியை வென்றது.

கிரூஸ் கொப்பேஸ் கோஷ்டிக்கும் யேசு மன்னரின் வாலிபக் கழகத்துக்கும் ஏற்பட்ட போட்டியில் கிரூஸ் கொப்பேஸ் 5—1 கோல்களால் எதிர்க்கோஷ்டியை வென்றது.

பாஷையூர் சென். அந்தனீஸ் 'பி' பிரிவு கோஷ்டிக்கும் கிரூஸ் கொப்பேஸ் கோஷ்டிக்கும் ஏற்பட்ட மோதலில் பாஷையூர் 2—1 கோல்களால் கிரூஸ் கொப்பேஸ் கோஷ்டியை வென்றது.

வாலிபக் கழகத்துக்கும் குருநகர் ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்கும் ஏற்பட்ட மோதலில் வாலிபக்கழகம் 2—1 கோல்களால் குருநகரை வென்றது.

இப்போட்டிகள் யாவும் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றன.

## பீற்றருக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப்போட்டி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. விளையாட்டுக்களை அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். ஸ்ரீனிவாசன் ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம் முனிசிபல் சபை ஆணையாளர் திரு. கட்சன் செல்வராசா விளையாட்டுப் போட்டிகளுக்குத் தலைமை வகித்தார். திருமதி கட்சன் செல்வராஜா பரிசில்கள் வழங்கினார்.

பீற்றர் இல்லம் 115 புள்ளிகளும், ஜோன் இல்லம் 111 புள்ளிகளும், போல் இல்லம் 87 புள்ளிகளும் பெற்றன. பின்வருவோர் சிறந்த விளையாட்டு வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சிரேட்ட பிரிவு: எஸ். தேமாஸ்மூர், மத்திய பிரிவு கே. பீலிக்ஸ், கனிட்ட பிரிவு: ஏ. யேசுநாயகம். ——

கரபந்தாட்டம்

## நடராசா சாம்பியன்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர்தெற்கு சனசமூக நிலையத்தின் 18-வது ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் சாம்பியன் போட்டி நடராசா கோஷ்டிக்கும் இராஜதுரைக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றது. இப்போட்டியில் நடராசாக் கோஷ்டியினர் 2—0 புள்ளிகளால் இராசதுரைக் கோஷ்டியையவென்று சாம்பியனாகினர். நடராசா கோஷ்டியில் செ. சிவரத்தினம், சு. துரைராசா, இ. பரமநாதன் ஆகியோர் நன்றாக ஆடினர். எதிர்க் கோஷ்டியில் ஆ. சண்முகலிங்கம், பொ. புண்ணியசிங்கம், யேசுதாசன், கு. இராஜதுரை ஆகியோரது ஆட்டம் ரசிகர்களின பாராட்டுக்கு இலக்கானது. இப்போட்டி மேற்படி நிலைய மைதானத்தில் நடைபெற்றது. ——

## அச்சுவேலிக்கு வெற்றி

புன்னாலைக்கட்டுவன், செவ்.

வலி-கிழக்கு ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் கைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் அச்சுவேலி கிறிஸ்தவக்கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியை 2—1 புள்ளிகளால் வென்றது.

திரு. எஸ். இளையதம்பி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். ——

## தோட்டத்துரைமார் கூட்டத்தில் பண்டா

கேகாலை, செவ்.

''தேயிலை உற்பத்தியின் நிலை திருப்திகரமாகவில்லை. எமது தொழிற்சாலைகளில் தேயிலை உற்பத்திமுறைகள் பின்தங்கியுள்ளன. இம்முறைகளைச் சீர்திருத்தப் புதிய இயந்திரங்களைக் கொடுத்துப், புதிய சந்தைகளுக்கான வசதிகளை ஆராய்ந்தும் உதவிசெய்ய எண்ணியுள்ளோம்.''

இவ்வாறு உணவு, விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டா, கேகாலை தோட்டத்துரைமார் சங்கத்தின் 62-வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ரப்பர் தொழில்பற்றி மந்திரி திரு. பண்டா குறிப்பிடுகையில் சிந்தெட்டிக் ரப்பர் உற்பத்தி செலவுள்ளதாகும் என்றார்.

உணவுப் பிரச்னை பற்றி அவர் பேசுகையில், நாட்டின் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண்பதற்கான நடவடிக்கைகளையே அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகக்கூறினார். தோட்டத்துரைமார்களையும் அரசாங்கத்தின் உணவு இயக்கத்தில் ஒத்துழைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

# கல்வியங்காடு கிணற்றில் பெற்றோல் ஊறுகிறதா?

யாழ்ப்பாணம், செவ்.

கல்வியங்காட்டு சந்தைக் கருகாமையிலுள்ள வளவொன்றிலுள்ள கிணற்றில் பெற்றோல் ஊறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் அக்கிணற்றில்இறங்கி கலக்கிஇறைத்துக்கொண்டிருந்த வாலிபர் ஒருவர் சுமார் முக்கால்மணி நேரம் மயங்கிய நிலையில் கிணற்றுக்குள்ளேயே விழுந்து கிடந்தாராம். இதனால் அவர் அறிவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டாராம்.

இக்கிணற்று நீரிலிருந்து குழாய்மூலம் தண்ணீர் விநியோகம் நடைபெறுவதாகவும், இத்தண்ணீரைப்பயன்படுத்தி கல்வியங்காட்டுச் சந்தையிலுள்ள பலதேநீர்க் கடைகளில் உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுவதாகவும், இதனால் பல உயிர்களுக்கு ஆபத்து நேரிடலாமென்றும், இதுசம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறும் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவிடம் அவ்வூர் வாசிகள்பலர்புகார் செய்துள்ளனர்.

இக்கிணற்றில் உண்மையில் பெற்றோல் ஊறுகிறதா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக நெருப்பை கிணற்றில் பற்ற வைத்தபோது உடனே கிணற்றுத்தண்ணீர்நெருப்புடன் சேர்ந்து பலமாக எரிந்ததாகவும், அப்போது கிணற்றை எட்டிப் பார்த்துக் கொண்டுநின்றபலர் நெருப்புக் காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும்தெரிகிறது.

இக்கிணற்றுக்கு அருகாமையில் இருக்கும்பெற்றோல் விநியோக ஸ்தாபனத்தின் நிலத்தின்கீழ் புதைக்கப்பட்டிருக்கும் 'டாங்கி'யிலிருந்து பெற்றோல் கிணற்றுக்குச் செல்வதாகவும், இதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்கும்படியும், யாழ்.மாவட்ட பெற்றோலியம் ஸ்தாபன அதிபருக்கு பொதுமக்கள் புகார் செய்ததைத்தொடர்ந்து கொழும்பு பெற்றோலியம் கூட்டுத்தாபன தலைமைக்காரியாலயத்துக்குஇவ் விஷயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசாரின் கவனத்தின் பேரில் இக்கிணறுதற்போது பொதுமக்கள் பாவிப்பிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இதுசம்பந்தமாகப் பூரண பரிசோதனை நடத்த ஒழுங்குகள்மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. [ந.நி]

# 'பிறரைவாழவைக்க தியாகங்கள்செய்ய வேண்டு'

## வதிரியில் சுவாமி சச்சிதானந்தாஜி

உடுப்பிட்டி, செவ்வாய்

''இப்புவியில் நாமனைவரும் இறைவனின் தெய்வீகக் குழந்தைகள். யாவும் இறைவனது அம்சமேயாகும். இறைவனே உலகமாகப் பரிணமித்து எங்கும் நிறைந்து காணப்படுகின்றார் இதனாலேயே ''எல்லா உலகமும் நீயே ஆனாய்'' என்று பெரியோர்கள் புகழ் மாலை சாற்றுகின்றனர். உலகில் நுட்பப் பொருள் கிடையாது. இறைவன் அருளினால் உலகில் உய்வில்லாதது ஒன்றுமேயில்லை. இரும்புத்துண்டை மின்சாரம் மூலம் அசைய வைக்கலாம். அணுவைச் சூரிய சக்தியினால் ஒளிபெறவும், ஓசையுண்டாக்கவும் முடிகின்றது. விஞ்ஞானம் இறைவன் தந்த வரப்பிரசாதமாகும். மனிதன் சுயநலத்திற்காக வாழக்கூடாது. இது பயனற்ற வாழ்க்கையாகும். விளக்கு, எண்ணையைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து எமக்கு ஒளியைத் தருவதுபோல நாமும் பிறருடைய நன்மைக்காக ஒரு சில தியாகங்களைச் செய்ய முன்வரல் வேண்டும்.''

மேற்கண்டவாறு யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தாஜி வதிரி, வடமராட்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் கரவெட்டி வடக்கு இந்துமாமன்ற ஆதரவில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். இக் கூட்டத்திற்கு முன்னாள் மாவட்ட நீதிபதி திரு செ. தனபாலசிங்கம் தலைமை வகித்தார். பண்டிதர் கணபதிப்பிள்ளை வரவேற்புரை கூறினார்.

கூட்ட ஆரம்பத்திலும் இறுதியிலும் ஏராளமான மாணவர்களும், பெரியோர்களும் தாய்மார்களும் பக்தி உணர்ச்சியுடன் கூட்டுப் பிரார்த்தனையில் உற்சாகமாகப் பங்குபற்றினார்கள். வழக்கறிஞர்கள் திருவாளர்கள் சிவானந்த ஜோதி, கனகரத்தினம் ஆகியோர் கூட்டுப் பஜனையை நடாத்தினார்கள். ஸ்ரீ நாகலிங்கம் சுவாமிக்கு மாலை சூட்டினார். இளைப்பாறிய பிரதம தபால் அதிபர் திரு. வே. தம்பையா உட்பட வேறு பலரும் பேசினர்.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கார்:

சோமசெற் E Y 9000 தொடர்பு இலக்க கார் விற்பனைக்குண்டு. யாவும் மிகச் சிறந்த நிலைமையில்உள்ளது. விபரங்களுக்கு செ. கனகராஜா, அமெரிக்கன் மிசன் பாடசாலை வீதி, வல்வெட்டித்துறை. 2377


## புகையிலைக்கு 18,000 ஏக்கர்

கொழும்பு, செவ்

புகையிலைப் பயிர்ச்செய்கைக்காக 18,000 ஏக்கருக்கதிகமான காணி தனியார் பகுதிக்கும், கூட்டுறவுச்சங்களுக்கும்விநியோகிக்கப்படவிருக்கிறது. மஹியங்கண, மொனரகல, பிபிலி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்படவிருக்கும் புதிய புகையிலைத் தோட்டங்கள் பீடித்தொழிலுக்குபயன்படும்.


7-4-67 முதல்
ஈஸ்வரன்
[கிளிநொச்சி]
தினசரி 6-30, 9-30
எஸ்.எஸ்.ஆர்.-விஜயகுமாரி நடித்த
ஆனந்தி 1727

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர் -விஜயகுமாரி நடித்த
ஆனந்தி

இப்பொழுது திரையிடப்படுகிறது
மனோஹரா
[யாழ்ப்பாணம்]
6-30, 9-30மணி. போயா தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் 4 காட்சிகள்
எம்.கே.ராதா-புஷ்பவல்லி நடித்த
சம்சாரம்
புத்தம் புதிய கொப்பி

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி— சரோஜாதேவி நடித்த
பாலும் பழமும்

REGAL - JAFFNA
Yul Brynner &
Richard Widmark
in
FLIGHT FROM ASHIYA
Time: 4-15, 7-00 9-45 p. m.

3-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]
வெம்பிளி [கண்டி] மொடேன் [பதுளை] நியூசினிமா [குருணாகலை]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
கிங்ஸ்லி [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விழிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி
மனோகர், அசோகன், வசந்தா, தங்கவேலு, மனோரமா, கருணாநிதி
மற்றும் பலர் நடிக்கும்
இரு வல்லவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப் பதிவேடுகள் தமிழிலும் பதிவுசெய்யப்பட வேண்டும

## யாழ். மாவட்ட இணைப்புக்குழு தீர்மானம

யாழ்ப்பாணம், புதன்

1966-ம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ் மொழி விசேஷ விதிப்பிரமாணங்களின் இரண்டாம் 'ஏ' பிரிவுக்கு அமைய யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திலும், மற்றைய யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க அலுவலகங்களிலும் இனிமேல் சகலவிதமான தொடர்புகளையும், தமிழ்மொழிமூலம் நடாத்துவதெனவும், இனிமேல் பொதுப்பதிவேடுகளை தமிழிலும் பதிவு செய்யவேண்டுமெனவும் கோரிய தீர்மானம் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட விசேஷ இணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இப்பிரேரணை கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளையால் பிரேரிக்கப்பட்டு, கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்தினால் ஆமோதிக்கப்பட்டது. திருவாளர்கள் செனட்டர் சு. நடராசாவும், ஊர்காவற்றுறை எம். பி. திரு. நவரத்தினமும் இப்பிரேரணையை ஆதரித்துப் பேசினார்கள்.

யாழ்ப்பாண மாவட்ட கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்தின் வேண்டுகோளுக்கிணங்கக் கூட்டப்பட்டபோதே மேற்கண்ட தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாண அரசாங்க செயலகத்திலுள்ள ஆலோசனை மண்டபத்தில் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் தமிழிலேயே நடாத்தப்பட்டது. கூட்டத்தில்கலந்துகொண்ட எம். பி. க்களும் செனட்டர்கள் அனைவரும் தமிழிலேயே பேசினார்கள். இக்கூட்டத்திற்குவடமாகாண பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம், வடமாநில வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம், பொதுஜனத்தொடர்பு அதிகாரி திரு. டபிள்யு. செல்வரத்தினம், மேலதிக அரசாங்க அதிபர் காரியாதிகாரிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட சுமார் 50 க்கு மேற்பட்டவர்கள் சமுகம் கொடுத்திருந்தார்கள்.

இப்பிரேரணையை ஆமோதித்து கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது,—

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அரசாங்க அலுவலகங்களில் தமிழில் எவ்வித அலுவல்களும் நடைபெறுவதில்லை எனவும் பொதுமக்களுக்குக்கூட கடிதங்கள் ஆங்கிலத்திலேயே அனுப்பப்படுகின்றன. இவ்விதமாகத் தமிழ் மொழிச் சட்டம் புறக்கணிக்கப்படுவதைத் தமிழ் மக்கள் இன்னமும் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்கள். எனவே விரைவில் இதனை நடைமுறைப்படுத்துவதோடு போதியளவு தமிழ்மொழியில் பயிற்சியில்லாத உத்தியோகத்தர்களுக்குத் தமிழில் பயிற்சியளிக்கவேண்டும்.

செனட்டர் நடராஜா பேசுகையில், கடந்த நாட்களில் அரசாங்கம் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சி செய்யவில்லையெனக் குற்றஞ்சாட்டினார்.

திரு. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் பொதுமக்கள் முறைப்பாடு செய்யாமலிருக்க தமிழ்மொழிப் பிரமாணங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதே சிறந்த வழியென்றும், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் பேசுகையில் அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகத்தர்கள் குறிப்புகளையும், கட்டளைகளையும் கடிதங்களையும் தமிழிலேயே எழுதி அங்குள்ள பதிவுச் சேவைகள் எல்லாவற்றையும் தமிழில் இருக்கச்செய்ய வேண்டுமெனவும் குறிப்பிட்டார். [ந. நி.]

## பாரபட்சமற்ற...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தந்தியொன்றை அனுப்பியுள்ளனர்.

இந்தத் தந்திகளின் நகல்கள் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும், ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி, சமசமாஜக்கட்சி, ரஷ்ய சார்பு கம்யூனிஸ்ட் கட்சி, சீனசார்புகம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் பொதுச்செயலாளர்களுக்கும், அனுப்பியுள்ளனர்.

வல்வெட்டித்துறையில் துப்பாக்கிச்சூட்டுச்சம்பவங்கள் நடைபெற்ற இடங்களை நேரில் பார்வையிடுவதற்கு உள்ளூராட்சிமந்திரி விரைவில் வரவிருக்கிறார் என்றும் அறியப்படுகின்றது.


தந்தி: 'ரோகிணி' ஸ்தாபிதம்: 1929

தொலைபேசி: 296

**S. R. S.**

**ஜவுளி மாளிகையில்**

- ✱ C. W. E. ஜவுளிகள்;
- ✱ கைத்தறிப் புடவைகள்,
- ✱ லங்கா மில் உற்பத்தி தினுசுகள்;
- ✱ மற்றும் உள்ளூர் தயாரிப்பிலான
- ✱ பட்டு பருத்தி துணிகள்;

யாவும்

வியாபாரிகள் மொத்தமாகவும் - சில்லறையாகவும்

எங்களிடம் நிதான விலைகளில் பெறலாம்

**எஸ். ஆர். செல்லத்துரை**

[அங்கீகாரம் பெற்ற

C. W. B. மொத்த, சில்லறை விற்பனையாளர்]

216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்


## மாவட்டசபை......

[1-ம் பக்கத் தொடர்ச்சி

ப்பு செய்வதன் மூலம் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் எண்ணிக்கையை குறைக்க, அல்லது பாடசாலைகளின் தரத்தை குறைத்துவிட முடியும் என யோசித்திருந்தால் அவரது எண்ணம் மடைத்தனமானது என்பதை நான் கூற விரும்புகிறேன்.

தன்மானம், கௌரவம் ஆகியவற்றுடன் உரிமைகளுக்கும், நீதிகளுக்கும் போராடும் நிலையில் இருந்த தமிழ் இனம் சென்ற 12 ஆண்டுகளாக அற்ப, சொற்ப சலுகைகளுக்கும் நன்மைகளுக்குமாக தமக்கு கிடைக்க வேண்டிய நியாயம், நீதி, உருத்து ஆகியவற்றை பணிந்து நின்று கேட்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது மனவருத்தத்திற்குரியதாகும்.

1948-ம் ஆண்டில் டி.எஸ். சேனநாயகாஅரசாங்கத்தில் நான் மந்திரிப்பதவி பெற்றிருந்தவேளையில், 'இலங்கையில் வாழும் மலைநாட்டுத் தமிழர்களின் உரிமைவிஷயமாக பாராளுமன்றத்தில் ஒருதீர்மானம் கொண்டுவரப்படுமாயின், அதுவிஷயமாக இந்தியப்பிரதமருடன் பேசி அவருடைய முழுச் சம்பளத்தின் பேரில்தான் அதைநான் கொண்டுவருவேன்'' என்றுகூறினார். திரு. டி.எஸ்.சேனநாயகாவுக்கும் இந்தியப்பிரதமர் ஸ்ரீ நேருவுக்கும் இடையில் இதுவிஷயமாக1947-48இல் இரண்டு மூன்று மாதங்களாக கடித மூலம் எழுதி கலந்து பேசினர். இதன்மூலம்இங்குவாழ்ந்த மலைநாட்டு தமிழர் சுமார் நாலரைலட்சம் மக்கள் பிரஜா உரிமைபெறக் கூடியதாக இருந்தது. இதை நான் ஆதரித்தேன் இப்போது சமஷ்டிக்கட்சியிலுள்ளவர்கள் இதை எதிர்த்து நம்கட்சியைவிட்டுப் பிரிந்தனர். ஓர் இந்திய மகனும் இந்நாட்டிலிருந்து வெளியேறு நாடுகடத்தல் என்ற பேச்சே எழாமலிருந்த அன்றைய மசோதாவை எதிர்த்து வெளியேறிய தமிழரசுக்கட்சியினர் இன்று ஐந்தேகால் லட்சம் மக்களை நாடுகடத்த வழிவகுக்கும் சிறிமா-சாஸ்திர் ஒப்பந்தத்திற்கு ஆதரவுகொடுத்திருக்கிறார்கள்

உடுப்பிட்டி எம்.பி.திரு மு.சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:—

'தமிழ்மக்களுக்குப் பிரயோசனமற்றதமிழ்மாகாணமல்லாத ஏனைய மாகாணங்களில் வாழும் தமிழ்மக்களுக்கு பாதிப்பைத்தரும் மாவட்டசபை மசோதாவை தமிழரசுக் கட்சியினர் கைவிட்டு ஒரளவேனும் தமிழருக்கு உரிமைகளைத் தரக்கூடிய தேசீய அரசாங்கத்தைத் தொடர்ந்து ஆதரிக்கவேண்டும். தமிழ்மக்களுக்கு சட்டரீதியாக இலங்கை அரசியல் திட்டத்தில் சமஉரிமை வழங்கப்பட வேண்டும். இதைத்தான்நாம் என்றும் கூறிவருகின்றோம்.

1858ம் ஆண்டு பண்டாரநாயகா இந்துப்பல்கலைக்கழகம் கொடுக்கவிருந்தார். அக்கசமயத்தில்நான் அதைத் தடுத்துவிட்டேன்என தமிழ் அமைச்சர்ஒருவர் கூறுகிறார். அவர்பேச்சு உண்மையாயிருந்தால்தமிழ்மக்களில்எதிர் காலச்சந்ததியினருக்குதீங்கு இழைத்தபெருமையும் அவரையே சாரும். நாம்இன்று கேட்கும் இந்துகலாச்சார பல்கலைக்கழகம் முழுமை பெறமுடியும். வித்தியோதய வித்தியாலங்கார பல்கலைக்கழகங்கள்எல்லாம் கலாசாரப் பல்கலைக்கழகங்களாயிருந்துதான் இன்றுமுழுமை பெற்று விளங்குகின்றன.

திருவாளர்கள் சி. [முதலி] [illegible] லால்நேரு ஆகியோருட்பட மற்றும் பலர் பேசினர்.

## 'இந்துக்கள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வர் சைவசிகாமணி திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராஜா உரைநிகழ்த்துகையில் எடுத்துக் கூறினார்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற இக் கூட்டத்துக்கு யாழ்ப்பாண குடாநாட்டைச் சேர்ந்த சைவஸ்தாபனங்களின் பிரமுகர்களும், ஆலய தர்மகர்த்தாக்களும் சைவப்பிரமுகர்களும் சமுகமளித்திருந்தார்கள்.

இக் கூட்டத்தில் திருவாளர்கள் த. முத்துசாமிப்பிள்ளை, மு. வைரமுத்து, சு. அம்பிகைபாகன், சைவப்புலவர் சி. வல்லிபுரம், தி. முருகேசம்பிள்ளை, அம்பலவாணர், த. இரத்தினம், சிவலிங்கம் ஜே. பி. கே. முத்துக்குமாரசாமி, முதலியார் செ. சின்னத்தம்பி, பொன்னுத்துரை, டாக்டர் கனகரத்தினம் ஆகியோர் உரைநிகழ்த்தினார்கள்.

கூட்டத்தில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான பல பிரச்னைகள் ஆராயப்பட்டு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தில் ''ஆண்டவன் சன்னிதானம் ஆகிய ஆலயத்தில் அவனருளைப் பருக ஆசைப்படும் அனைவருக்கும் சமவாய்ப்பு என்ற தயாமூல தர்மசீலமாகிய சைவ நீதியின் அடிப்படையிலேயே பாரதநாட்டு ஆலயங்களிலெல்லாம் இன்று ஆராதனைகள் நடைபெறுகின்றன. ஆகவே, ஆராதனைக்குரிய ஆசாரத்தோடு ஆலயத்துக்கு வரும் சைவர்கள் அனைவர்க்கும் ஆலயப்பிரவேசம் உரியது என்பதே எங்கள் திடமான கொள்கை என்பதையும், எங்கள் மத்தியில் இன்று வேகநிலை அடைந்துள்ள இந்த ஆலயப்பிரச்னையை இந்துக்களாகிய நாமே தீர்த்து வைக்கவேண்டும். உரிமையற்றவர்கள் இதில் தலையிடல் ஆகாது என்பதையும் எங்கள் உறுதியான அபிப்பிராயமெனத் தெரிவிப்பதோடு, இந்தப் பிரச்னையைச் சாதுவீக முறையில் பிரசாரவாயிலாகவும், ஆலய தர்மகர்த்தாக்கள், குருக்கள்மார் முதலியோரை நேரில் சந்தித்தல் வாயிலாகவும் விரைவில் தீர்த்துவைப்பதற்கு வேண்டியநடவடிக்கைகளை உருவாக்கும் பொருட்டு ஒரு செயற்குழுவை இந்து மாமன்றத்தின் அழைப்பில் கூடி இருக்கும் இவ் இந்துப் பிரமுகர்சபை தீர்மானிக்கின்றது''. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை செயல்படுத்த பின் வரும் உறுப்பினர்களைக்கொண்ட செயல்குழு அமைக்கப்பட்டது.

தலைவர்: திரு. த. முத்துசாமிப்பிள்ளை, காரியதரிசி: திரு. ச. அம்பிகைபாகன், பொருளாளர்: திரு. எம். எஸ். கந்தையா. மற்ற உறுப்பினர்கள்: திருவாளர்கள் கே. முத்துக்குமாரசாமி, ஏ அம்பலவாணர் முதலியார், செ. சின்னத்தம்பி, மு. வைரமுத்து, அ. தையல்பாகர், ரி, முருகேசம்பிள்ளை, சி. க. வேலாயுதபிள்ளை, ஏ. தனபாலசிங்கம், இ. வேலாயுதர், ஆ. கந்தையா, சைவப்புலவர் சி. வல்லிபுரம், பண்டிதர் செ. துரைசிங்கம், எஸ். சிவஞானம், வி. நாகலிங்கம், டாக்டர் ரி. கே. கனகரத்தினம், டாக்டர் வி. ரி. பசுபதி.

பண்டத்தரிப்பு, திங்கள்

இளவாலை புனித என்றியரசர் கல்லூரி அதிபர் வணஸ்ரனிஸ்லாஸ் சுவாமியாரின் சுகவீனம் காரணமாக மேற்படி கல்லூரியின் உபவண அதிபராக அல்பிரட் சுவாமியார்நியமிக்கப்பட்டுள்ளார்

## வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் மூவருக்கு எதிராக பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுக் காலை மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையைப் பார்ப்பதற்காக செஞ்சட்டை அணிந்த வாலிபர்கள் உட்பட ஏராளமானோர் கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளைப் பிரதிநிதிகளான கே. ஏ. சுப்பிரமணியம், வி. ஏ கந்தசாமி, கணபதிப்பிள்ளை ஆகியோர்மீது பொலிசார் உத்தரவை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் என். சத்தியேந்திரா, புறக்டர் ஏ. அன்ரனியின் அனுசரணையுடன் ஆஜரானார். உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் வராததால் மாஜிஸ்டிரேட் விசாரணையை மே மாதம் 25-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## இரு தலையுடன பிறந்த கனறு

யாழ்ப்பாணம், செவ்வாய்

இரண்டு தலையுடனான அதிசயக் கன்று ஒன்றை பசு ஈன்றெடுத்தது. இந்தச் சம்பவம் வண்ணார்பண்ணை மானிப்பாய் வீதியிலுள்ள இ. பொன்னம்பலம் என்பவரது வீட்டில் நேற்று முன்தினம் நடந்துள்ளது. கன்று பூரண வளர்ச்சி பெற்று கழுத்திலிருந்து இரு தலைகள் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. கன்று பிறந்தவுடனேயே இறந்துவிட்டது.

## இன்று

நீர்வேலி கந்தசுவாமி கோவில் தேவஸ்தானத்தில் இன்றிரவு 8 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் ''பக்த கௌரி'' என்னும் பொருள் பற்றி கதாகாலட்சேபம் செய்வார்.

## மல்லிவரத்து

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதியிலுள்ள 30 கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன கடைகளுக்கு மல்லி வந்து சேர்ந்திருக்கிறது.

ஒருவருக்கு 5 கால் றாத்தல் மல்லி வீதம் விற்பனை செய்யும்படி உதவி உணவு கட்டுப்பாட்டதிகாரி அறிவித்துள்ளதாக தெரிய வருகிறது. யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கும் மல்லி பழுதடைந்திருப்பதாகவும், பாவனையாளர், அதனை வாங்கத் தயங்குகிறார்களென்றும் கடைக்காரர் ஒருவர்தெரிவித்தார்.

## அமைச்சர் சுகததாஸா கலந்து கொள்ளும் களியாட்டுவிழா

உடுப்பிட்டி, செவ்வாய்

உடுப்பிட்டி வாலிப முன்னணியின் ஆதரவில் உடுப்பிட்டி எம்.பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும். உடுப்பிட்டித் தொகுதி புதுவருட தினக் களியாட்டுவிழா இன்று கரவெட்டியில் ஆரம்பமாகியது. 15-ந்திகதி கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் தேசியசேவைகள் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வி.ஏ. சுகததாஸாவும், யாழ்ப்பாணஎம்.பி.யும், தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாராக் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி [illegible]-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ந்திகதி அச்சிட்டு வெளி[illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org